# தஞ்சை நால்வரும் பரத நாட்டியமும்

அரசுக் கவிஞர், 'கலைமாமணி', பேராசிரியர் தஞ்சை K. P. சிவாநந்தம்

பரதக்கலையின் இன்றுள்ள புதிய பாணியை உருவாக்கி உதவியவர்கள் தஞ்சை நால்வர் ஆவர். அவர்கள்தாம் 18-ம் நூற்றாண்டில் தஞ்சையில் வாழ்ந்த தமிழ் ஓதுவாமூர்த்திகள் மரபில் உதித்தவர்களும், திருவாரூர் கலாசார்ய ஸ்ரீ முத்துஸ்வாமி தீட்சிதர் அவர்களது மாணாக்கர்களும். தஞ்சை, திருவநந்தபுரம், மைசூர் முதலிய சமஸ்தான வித்வான்களும், தஞ்சை ஸ்ரீ பிரஹதீஸ்வரஸ்வாமி கோயில் நாட்டியக் கைங்கரிய பரம்பரையில் வந்தவர்களுமான திருவாளர்கள் பொன்னையா, சின்னையா, சிவானந்தம், வடிவேலு ஆகியோர் தஞ்சை நால்வர்களாவர். இந்நால்வரும் தங்கள் குலதெய்வமாகிய பிரஹதீஸ்வரர் பற்றியும், அம்பாள் பற்றியும், புகழ் பெற்ற அரசர்கள் மந்திரிகள் பற்றியும் பல சாகித்தியங்களை இயற்றி இருப்பது எல்லோருக்கும் தெரியும்.

திருமூர்த்திகள் வாழ்ந்த காலத்திலேயே இந்நால்வரும் பெரும் புகழுடன் வாழ்ந்தார்கள். இவர்கள் கீதம், வாத்யம், நிருத்தியம் இம்மூன்று கலைகளிலும் மகாவித்வான்களாக அக்காலத்தில் விளங்கியதுடன், ஸாகித்திய கர்த்தாக்களாகவும் விளங்கியதால் பெரும்புகழ் அடைந்தார்கள். அக்காலத்தில் கூத்தாக விளங்கிய பரதநாட்டியத்தைக் கச்சேரி ரூபமாக நடத்த வழி வகுத்து, அதற்குண்டான ஆரம்பப் பாடங்களான அடைவு ஜதிகளை திட்டம் செய்து, கச்சேரி முறையாக நடத்த முதல் முதலில் அலாரிப்பு, ஜதிஸ்வரம், சப்தம், பதவர்ணம், ஸ்வரஜதி, தானவர்ணம், பதம், ஜாவளி, ராகமாலிகை, தில்லானாவாக வகுத்து இவை ஒவ்வொன்றுக்கும் பல ராகங்களிலும், பல தாளங்களிலும், பல பாடல்களை தமிழிலும், தெலுங்கு மொழியிலும், இயற்றி என்றும் அழியாமல் செய்தவர்களாவர்.

நாட்டியக் கச்சேரிக்கு பதவர்ணங்களை நடத்தும்போது, எந்தெந்த இடங்களில் தீர்மானங்கள் அமைக்க வேண்டுமோ அவ்விதம் அமைத்து அவ்வர்ணங்களை பிரபலப்படுத்தினார்கள். இவர்கள் இயற்றிய வர்ணங்கள், ஸ்வரஜதி ஒவ்வொன்றிற்கும் பல சாகித்தியங்கள் இயற்றி இருக்கிறார்கள். உதாரணமாக சங்கராபரணத்தில் அமைந்த 'மனவிகை' என்ற பிரகதீஸ்வரர் பேரில் இயற்றிய தெலுங்கு சாகித்தியமும் 'ஸாரஸாக்ஷ"டா' என்ற மற்றொரு தெலுங்கு சாகித்தியமும், அதே வர்ண மெட்டில் 'அதிமோகங்கொண்டேன்' என்ற அரசர் பெயரில் இயற்றிய தமிழ் சாகித்தியமும், அதே வர்ணமெட்டில் மதுராபுரி சுந்தரேஸ்வரர் பேரிலும் மற்றொரு சாகித்தியமும் இயற்றப்பட்டிருக்கின்றன. வடிவேலு அவர்கள் முதன்முதலில் மேல் நாட்டு வாத்தியமான பிடிலை கர்நாடக சங்கீதத்திற்குப் பக்கவாத்தியமாகவும், கர்நாடக சங்கீதத்தை வாசித்துக் காட்டியதற்காகவும், ஸ்வாதித் திருநாள் மகாராஜா அவர்கள் தன் சமஸ்தானத்தில் வடிவேலுவை பிரதம ஆஸ்தான வித்வானாக அமர்த்தி, 1834-ல் தந்தத்தினால் செய்யப்பட்ட பிடில் ஒன்றைப் பரிசாகத் தந்து தன் சமஸ்தானத்திலேயே அமர்த்திக் கொண்டார்.

இவர்கள் இயற்றிய தானவர்ணங்களில் ராக பாவங்களுடன் கூடியதாகவும், ஸ்வர அடுக்கு, பல வகைகளாலும் குறைந்த பதாக்ஷரங்களோடு கூடிய ஸாகித்தியத்தை அகாரங்கள் கலந்த தான வரிசைகளைப் போல், தாளயதாக்ஷரத்திற்கு 2வது 3வது காலத்திலும், ஸ்வரவரிசைகளானவை தானஜதிகளையும் கிரஹங்களையும் உணர்த்துவதுபோல், ஓர் இராகத்தில், பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற அங்கங்களுடன் அமைந்துள்ளன. இது சதுஸ்ர திருபுட, திஸ்ரதிருபுட, கண்டஅட, சதுஸ்ர அட, திஸ்ரஅட, ரூபக, மிஸ்ரசாபு முதலிய தாளங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றது. சில வர்ணங்களில் முக்தாயிஸ்வரத்தில் மகுடமென்னும் ஸ்வர லக்ஷணமும், சில வர்ண ஸ்வரங்களில் பஞ்சமாந்தியம், தைவதாந்தியம் என்ற முறையும் அமைந்திருக்கின்றன. சில வர்ணங்களில் சிட்டை ஸ்வரங்களுக்கெல்லாம் ஸாகித்தியங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

கச்சேரி வடிவமாக முதன் முதலில் அமைத்து அதனை அரங்கேற்றம் செய்யுங்கால் அரசர் அவர்கள் முத்துசாமி தீக்ஷிதர் அவர்களை வரவழைத்துக் கச்சேரியைப் பார்த்து ரஸிக்கும்படி செய்தார். அன்று அரங்கேற்றம் முடிந்ததும்

ஸ்ரீமுத்துசாமி தீக்ஷிதர் அவர்கள் சபைமுன் எழுந்து தம் பாராட்டுகளையும் ஆசிகளையும் வழங்கி, சங்கீதக் கலைக்கு புரந்தரதாஸர் வழி காட்டியது போல் தம் மாணவர்கள் நாட்டியக் கலைக்கு வழி காட்டியதோடு, இக்கலை உள்ளளவும் தங்கள் பெயர் அழியாவண்ணம் செயல் புரிந்துவிட்டனர் எனப் புகழ்ந்து, தம் மாணவர்களுக்கு 'பரத ஸ்ரேஷ்டர்' என்ற பட்டமும் கொடுத்தார்.

சங்கீத நடையானது சில அம்சங்களில் தங்கள் குருவைப் பின்பற்றியும், சில அம்சங்களில் தனிச் சிறப்பு வாய்ந்ததாகவும் அமைந்திருக்கிறது. ஸாகித்தியத்தின் கருத்தோ, தெய்வபக்தி, குருபக்தி முதலிய நல்லொழுக்கங்களைச் சிறப்பித்துக் காண்பிக்கின்றது. முதன் முதலில் 'நவரத்னமாலா' என்ற ஒன்பது கீர்த்தனங்களையும் குருவணக்கமாக இயற்றியுள்ளார். அவைகளில் தங்கள் ஆசிரியரைப் போலவே 'குருகுஹ' என்ற முத்திரையுடன் சுவாமியையும் அம்பாளையும் சம்பந்தப்படுத்திப் பாடியிருக்கிறார். அதில் 'குருகுஹதாஸ', 'குருகுஹ பக்த', 'குருகுஹமூர்த்தி' என்ற முத்திரைகள் வருகின்றன. இதற்குச் சிறந்த ஓர் ஐதிகம் கர்ண பரம்பரையாக வழங்குவதுண்டு. அதாவது தங்கள் குருவான ஸ்ரீதீக்ஷிதர் அவர்கள் முருகபிரான் அருள் பெற்றுத் திகழ்ந்தவராதலால், தம் குருவையும் சுப்ரமணியக் கடவுளையும் ஒரே அம்சமென்று பக்தி பூர்வமாகத் தம் மனதில் உணர்ந்து உருகித் தானும் 'குருகுஹ' என்ற முத்திரையை 'நவரத்ன மாலா' கீர்த்தனங்களில் கையாண்டாரென்று சொல்வதுண்டு. இது ஒன்றே அவரது குருபக்தியின் மேன்மையை விளக்கிக் காட்டுகிறது.

அன்றியும் இவர் முதலில் இயற்றிய மாயாமாளவ கௌள ராகத்தில் 'மாயாதீத ஸ்வரூபிணி' என்ற கீர்த்தனையின் இறுதியில் 'மாகுருகுஹ ஸ்வாமினே தாஸுடைதி' என்று கூறியுள்ளார். அதில் தம் சகோதரர்களையும் தம்முடன் சேர்த்து (மாகுரு குஹ) எங்கள் குருவாகிய குருஸ்வாமிக்குத் தாஸனானேன் என்று கூறியுள்ளார். இவ்வாக்கியத்திலுள்ள பொருள் இவருடைய சகோதர வாஞ்சையையும், குருபக்தியையும் எடுத்துக் காண்பிக்கிறது. இவர் முதலில் மாயா மாளவகௌள ராகத்தைக் கையாண்டதற்கு ஓர் சிறப்பு உண்டு. இந்த ராகம் சங்கீதம் கற்பவர்களுக்கு முதலாக இருப்பதாலும், தம் குருவாகிய ஸ்ரீ தீக்ஷிதர் அவர்களும் முதலில் இதே ராகத்தில்தான் சாகித்தியம் இயற்றினார் என்பதாலும், இந்த ராகம் மங்களகரமானதென்று கூறப் பெற்றிருப்பதாலும், இவரும் இந்த ராகத்தை முதலில் கையாண்டாரென்று தெரிகிறது. இக் கீர்த்தனம் ஸ்வர, ஜண்டை வரிசை, அலங்காரங்கள் என்ற முறையையொட்டி, சமக ஜாருக்களோடு அமைந்திருப்பது சிறப்பாகும்.

மற்றொரு கீர்த்தனத்தில் 'ஸாடிலேனி குருகுஹ மூர்த்தினி நே ஆநாடனுண்டி நம்மினானு, என்று தன் குருவை இணையற்றவ ரென்று கூறுவதோடு, அனுபல்லவியில் பிருஹதீசா, உயர்ந்த மதுரமான வாக்குவன்மையை நான் அடைய வேண்டி இணையற்ற குருவை ஆதிமுதல் நம்பி இருக்கின்றேன்" என்ற பொருள்படக் குறிப்பிடுகிறார். மேலும் "ஆநாடனுண்டி' என்பதனால் இவர் முன்னோர்களுக்கும் ஸ்ரீ தீக்ஷிதர் அவர்களது முன்னோர்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்திருக்க வேண்டுமென்பதையும் காட்டுகிறது. இவருக்கு அதிபால்யத்திலேயே கலையில் விருப்பமும், தெய்வபக்தியும் உண்டாகியிருக்க வேண்டுமென்பது தெரிகிறது. இந்தக் குறிப்பைக் கல்யாணி ராகத்திலமைந்த 'நின்னு பாஸி' என்ற கீர்த்தனத்தின் சரணத்தில், வரும் சில வாக்கியங்களும் அறிவுறுத்துகின்றன. அதாவது 'சின்ன வயஸுன நாதுரீதெலிஸி நடுசுகோனைதினு' என்கிறார். இதனால் இவருக்கு அதிபால்யத்திலிருந்தே கல்வியில் ஆர்வமும், தெய்வபக்தியும் நல்லடக்கமும் பிறவிக் குணமாக இருந்தமை விளங்குகிறது.

மற்றும் இவர் தமது இளைய சகோதரர் நோய் வாய்ப்பட்டு வருந்திய காலை பிருஹந்நாயகி பற்றி சங்கராபரண ராகத்தில் ஒரு கீர்த்தனம் இயற்றி, அதன் கடைசியில் 'மா ஸஹோதருனி ரக்ஷிம்கமு' என்று குறிக்கிறார்.

மற்றொரு கீர்த்தனத்தில் 'பிருஹதீஸ்வர ஸ்வாமியின் பாத கமலங்களை உண்மையாக நான் வணங்கியதாலேயே ஸ்ரீ தீக்ஷிதர் அவர்களுக்கு நான் மாணாக்கனாக இருக்கின்றேன்' என்று பொருள் படக் கூறியுள்ளார். மேலும் குருகுலவாஸம் முடிந்த பின்னரும் மாணாக்கனாக இருக்கின்றேனென்ற உண்மையை எடுத்துக் கூறுவது இவருடைய குரு பக்தியின் சிறப்பையும், ராஜஸமற்ற மனத்தின் தன்மையையும், தெய்வபக்தியையும் நன்கு புலப் படுத்துகிறது.

இவர்கள் நாட்டியக் கலைக்குப் பெருந்தொண்டு செய்ததோடல்லாமல், ஜதிஸ்வரம் சுமார் முப்பது ராகங்களிலும், சப்தம், தஞ்சை பிரகதீஸ்வரர், பத்ம நாபஸ்வாமி, சுந்தரேஸ்வரர், இன்னும் மற்ற தெய்வங்கள் பேரிலும், அரசர் மந்திரி பேரிலும்,

சுமார் இருபதும், பதவர்ணம் சுமார் ஐம்பதும் தமிழிலும் தெலுங்கிலும், கீர்த்தனைகள், பதங்கள், ஜாவளிகள், தில்லானாக்கள் சுமார் 300 பாடல்களும் இயற்றி இருக்கிறார்கள். இயல் இசை நாடக மன்றத்தின் செயலாளர் அவர்கள் பெருமுயற்சியால் தஞ்சை நால்வர் இயற்றிய பாடல்கள் மான்ய உதவியோடு இரண்டாம் பதிப்பாக வெளிவர விருக்கிறது. அக்காலத்தில் பரதக்கலை எவ்வாறு நடத்தப்பட்டு வந்தது என்பதை திட்டவட்டமாக யாவரும் கூற முடியாமற் போனாலும், தஞ்சை நால்வர் வகுத்த பரதக்கலையின் தற்போதைய பாணியே வழக்கத்தில் வந்து கொண்டிருக்கிறது.

இவ்வாறு இந்நால்வரும் தானவர்ணங்கள், பதவர்ணங்கள், கீர்த்தனைகள், ஜாவளிகள் ஆகியவைகளைச் செய்து கர்நாடக சங்கீதக் கலையை வளர்த்ததோடு, வாத்தியத்திலும் தேர்ச்சி பெற்று விளங்கியவர்கள் இவர்கள் மட்டுமேயாவார்கள். இவர்களுடைய பெருமைகளையும், சாகித்திய விசேஷங்களையும் லய சம்பந்தமான விளக்கங்கலையும் கலை உள்ள வரையிலும் யாவராலும் மறக்க முடியாது. ♦


*With Best Compliments*
*From :*

**ASSOCIATED TRANSPORT CORPN. PVT. LTD.,**
*Transport Contractors & Freight Forwarders,*
29, ZINDA SAHIB STREET,
**MADRAS-600 001.**
Phone : 29791, 29792, 24071

**Shanti Roadways,**
*Transport Contractors & Freight Forwarders*
122, WALLTAX ROAD,
**MADRAS-600 003.**
Phone : Office 31079, 35309
Residence : 30239